1978 செப்டம்பர் 1] [மேலவைத் தலைவர்]

நிறுவனங்கள் பொதுமக்களுக்குச் செய்திகளை அளிக்கும் போது, அவையின் நடவடிக்கைகளை இருட்டடிப்பு செய்யாமல் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியம். எனவே இது குறித்து நான் வானொலி நிலைய இயக்குநர் அவர்களுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்கிறேன். இந்தப் பிரச்சினையை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே இதில் நாம் உரிமைப் பிரச்சினை எழுப்பத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

4. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரின் விவர அறிக்கை வினா 29-ன் துணை வினாக்களின் விடைக்குத் திருத்தம் குறித்து.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: மாண்புமிகு மேலவைத் தலைவர அவர்களே, 1977-78 ஆம் ஆண்டில் சிறுர் நல மையங்கள் திறப்பதைக் குறித்து திரு. வே. தங்கப்பாண்டியன், எம்.எல்.சி. அவர்களால் எழுப்பப்பட்ட சட்ட மன்ற மேலவை வினா எண் 29-ன் (பழைய எண் 192) துணை வினாக்களுக்குப் பதில் அளித்தபோது, சிறுர் நல மையத்தில் சேரும் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 20 ஒதுக்கப்படுகிறது என எடுத்துரைக்கப்பட்டது. ஆனால் சரியான விளக்கம் பின்வருமாறு:—

'கேர்' நிறுவனம் மூலம் இலவசமாக வழங்கப்படும் 'பாலகார்' உணவு சிறுர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒரு வருடத்தில் 300 நாட்களுக்கு சமைத்த 80 கிராம் பாலகார் உணவு ஒவ்வொரு குழந்தைக்கும் அளிக்கப்படுகிறது. பின்வருவனவற்றிற்காக அரசு, நிதி ஒதுக்கம் செய்கிறது.

1. பாலகார் உணவை சமைப்பதற்குத் தேவையான சமையல் சாமான்கள், எரி பொருள் ஆகியவற்றை வாங்குவதற்கு என ஒவ்வொரு குழந்தைக்கும் நாள் ஒன்றுக்கு 4.5 பைசா வீதம் 70 சிறுர்களுக்கு;

2. சில்லறைச் செலவினத்திற்கு ஒவ்வொரு மையத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 12;

3. போக்குவரத்து செலவினத்திற்கு ஒவ்வொரு மையத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 10;

4. கல்விச் சாதனங்களும் (ரூ. 500) சமையல் சாமான்களும் (ரூ. 500) வாங்குவதற்கு என ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 1,000. ஐந்து வருடங்களுக் கொருமுறை இவை மாற்றப்படுகின்றன.